விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 082 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 27 வெள்ளிக்கிழமை (11.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




யாழ். கல்வி
கண்காட்சி
2022
இன்று ஆரம்பம்
நேரம்
காலை 9.00 மணி
இடம்
வலம்புரி ஹோட்டல்

## புத்தூரில் மின்சாரம் தாக்கியதில் கணவன், மனைவி உயிரிழப்பு

### மின் ஒழுக்கு ஏற்பட்டதால் விபரீதம்



(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் கணவனும் மனைவியும் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

புத்தூரில் இந்தச் சம்பவம் நேற்று இடம் 15

## நாட்டில் இன்றும் மின்துண்டிப்பு

(கொழும்பு)

நாட்டில் இன்றும் மின் துண்டிப்பு தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன் பாட்டு ஆணைக் குழு 15

### லங்கா ஐஓசி நிறுவனத்தின்

## எரிபொருள் விலை மீண்டும் அதிகரிப்பு

### டீசல் ரூ.75, பெற்றோல் ரூ.50 ஆல் உயர்வு



(கொழும்பு)

நள்ளிரவு முதல் மீளவும் எரிபொருள் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக லங்கா ஐஓசி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி ஒரு லீற்றர் டீசல் 75 ரூபாயினாலும் ஒரு லீற்றர் பெற்றோல் 50 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 15

### எதிர்வரும் 15 ஆம் திகதி

## கூட்டமைப்புடன் ஜனாதிபதி சந்திப்பு

### தீர்வு தொடர்பில் கலந்துரையாடப்படலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் 15

## மருந்து பொருட்களின் விலையை அதிகரிக்க

### அரசாங்கம் அனுமதி

(கொழும்பு)

மருந்து பொருட்களின் விலையை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

டொலரின் பெறுமதிக்கேற்ப மருந்து இறக்குமதியாளர்கள் மருந்துகளின் விலையை நியாயமான முறையில் அதிகரிப்புச்செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள் 15

## எரிபொருட்களின் விலையை உயர்த்துக

### அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் விலையில் திருத்தம் செய்வது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்மொழிந்துள்ளது.

டீசல் லீற்றர் ஒன்றிற்கு 128 ரூபாயும் பெற்றோல் லீற்றர் ஒன்றிற்கு 180 ரூபாயும் அரசுக்கு இறக்குமதி செய்வதன் மூலம் நிதி இழப்பு ஏற்படு 15

### வரலாறு காணாதவாறு டொலர் பெறுமதி அதிகரிப்பு

# பொருட்களின் விலை சடுதியாக உயர்வடையும்

### பெற்றோல் ரூ.51, டீசல் ரூ.35, பருப்பு ரூ.101, சிலிண்டர் ரூ. 824, சீனி ரூ. 44, மா ரூ. 45 ஆல் அதிகரிக்கும் அறிகுறி



(கொழும்பு)

வரலாறு காணாதவாறு டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் சடுதியாக அதிகரிக்கும் அறிகுறி காணப்படுகின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

### கல்லுண்டாயில் விபத்து;

## வீதி அபிவிருத்தி பணியாளர் பலி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாய் வீதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வீதியை கடக்க முற்பட்ட வேளை காரை 15

## அடுத்துவரும் தேர்தலில் தனித்து போட்டியிடுவோம்

### சுதந்திரக் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்துவரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே 15

## பயங்கரவாத தடுப்பு சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

( 03ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் திரு. S. நந்தகுமார் அவர்களின் அன்பு மாமனார்

## சிமியோன் அந்தோனிப்பிள்ளை

அவர்களின் மறைவையொட்டி அவர்கள் குடும்பத்தினருக்கு யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

(10571)

**பாடசாலை நலன்புரிச் சங்கம்**
**யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தர 2020 பரீட்சையில் நடைமுறைப் பாடங்களுக்கான பெறுபேறுகளை மீள் திருத்துவதற்கான விண்ணப்பங்கள் இணையவழியில் மாத்திரம் கோரப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி மேலே குறிப்பிடப்பட்ட முறைகள் மூலம் மீள் திருத்துவதற்காக விண்ணப்பிக்க முடியும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த விண்ணப்பங்கள் 10.03.2022 முதல் 18.03.2022 வரை கோரப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையில் கடமையாற்றும் **சி.சுதாகரன்** அவர்களின் தந்தையாரும் எமது விலங்கியல் துறையில் அலுவலக உதவியாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றவருமான

## திரு. சி. சிறீஸ்கந்தராஜன்



அவர்கள் 09.03.2022 புதன்கிழமை இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்** மற்றும் **ஊழியர்கள்**
**விலங்கியல் துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (10574)

# சேவைநயப்பும் பாராட்டு விழாவும்



செல்வி **சிவயோகவதனி சிற்றம்பலம்**
**(கணித பாட ஆசிரியை)**
**யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்,**
**மாவிட்டபுரம், தெல்லிப்பழை**

எங்கள் பாடசாலையில் சேவையாற்றி 25.08.2021 அன்று சுயவிருப்பின் அடிப்படையில் ஓய்வுக்கு முன்பே ஓய்வு பெற்றுச் சென்ற எமது ஆசிரியை செல்வி **சிவயோகவதனி சிற்றம்பலம்** அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியரின் சேவை விபரம்**

| நிலையம் | சேவைக்காலம் |
|---|---|
| 1. யா/பெரியவிளான் R.C.T.M.S | 25.10.1988 - 26.01.1992 |
| 2. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 27.01.1992 - 31.12.1993 |
| 3. யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை | 01.01.1994 - 17.05.2006 |
| 4. மே/ஜெய/ஸ்ரீஜெயவர்த்தனபுர இந்து வித்தியாலயம் | 18.05.2006 -06.04.2014 |
| 5. யா/சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி | 07.04.2014 - 06.09.2017 |
| 6. யா/வீமன்காமம் மகா வித்தியாலயம் | 07.09.2017 - 25.08.2021 |

(10575)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
11.03.2022 **பாடசாலைச் சமூகம், யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்**

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 11 . 1935

மறைவு 20 . 02 . 2021

## அமரர் ப.க.ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

[திதி: பூர்வபக்க நவமி - 11.03.2022]

மண்ணில் நல்ல வண்ணம் வாழ...
கண் போன்ற கல்விதான் கைகொடுக்குமென்ற
நற்சிந்தனையை எம் மனதில் பதியவைத்து
எமக்கெல்லாம் நல்வாழ்வளித்த அன்பு அப்பாவே!
கல்விப் பணிதான் பொற்பணி என நினைந்து
நல்லாசிரியனாய் இணைந்து பணியாற்றி
பலரது பாராட்டைத் தனதாக்கிய அன்புத் தெய்வமே!

நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும்...
எம் மனதில் நீங்கள் விட்டுச் சென்ற
நல்ல சிந்தனைகள் பல்லாண்டு மறைந்தாலும்
எம்மோடு என்றும் இணைந்தே பயணிக்குமென
தங்கள் பாதக்கமலங்களில் பணிவோடு
மலர் தூவி அஞ்சலிக்கின்றோம் நாம்...

தெணியம்மன் வீதி,
திருநாவலூர், புலோலி மேற்கு. (C-3931)

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

# 25ஆம் ஆண்டு நினைவு



அன்னைமடி 09 - 05 - 1947

ஆண்டவனடி 15 - 02 - 1997

## உயர்திரு. V.T.பத்மநாதன்

(பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி, பருத்தித்துறை)

அன்புடை அப்பாவுக்கு,
உங்கள் நினைவுகளால்
நீட்சியுறும் நிமிடங்கள்
வருடங்களாய்க் கனக்கிறது
உங்கள் ஸ்பரிசத்தின் பரிமளிப்பை
இன்னும் நுகர்கிறோம்.
வற்றாத ஆன்மாவின் பிணைப்பு

அகிலத்திலெமை அணையாது
காக்கிறது
வித்திட்டு வித்தகமாய் வளர்த்தீர
விருட்சமதில் இளைப்பாற
ஒருமுறைதான் வாரீரோ?
நீள நினைந்திருப்போம் – உமை
நித்தலும் கைதொழுவோம்

(C-3936)

[illegible]த்தை,
நெல்லியடி, கரவெட்டி.

அன்புடன் :- மனைவி சிவாஜினி,
பிள்ளைகள் – பாமினி, நிருஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்குக

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எழுத்துமூல ஆவணத்தை எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் நேற்று நேரில் கையளித்தார்.



இந்த விடயம் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நாம் கையெழுத்து வேட்டையை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நடவடிக்கைக்கு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், மாணவர்கள் மற்றும் மூவின மக்கள் தங்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட்டு, சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய சட்டமொன்று அதனைப் பிரதியீடு செய்ய வேண்டுமென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எழுத்துமூல ஆவணத்தை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, என்னிடம் கையளித்தார் என தெரிவித்தார். (நி)

# மாட்டுவண்டியில் சபைக்கு சென்ற உறுப்பினர்கள்



(பனிக்கன்குளம்)

நாட்டில் அதிகரித்துள்ள விலைவாசி பொருட்கள் தட்டுப்பாடு, மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று மாட்டு வண்டிலில் பிரதேச சபைக்கு சென்று கவனயீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்

நாட்டில் அதிகரித்துள்ள பொருட்களின் விலையேற்றம் மற்றும் டீசல் தட்டுப்பாடு, மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை காரணம் காட்டி இந்த நிலைமைகளுக்கு அரசு உடனடியாக தீர்வு வழங்க வேண்டும் எனக் கோரி கவனயீர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து மாட்டு வண்டிலில் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் பிரதேச சபை நோக்கிச் சென்றனர். (4-6-281)

# மீண்டும் அதிகரிக்கும் பால்மா விலை?

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவின் விலையை 300 ரூபாவால் அதிகரிக்க பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் பரிசீலித்து வருகிறது.

இதற்கமைய 400 கிராம் பால் மா பக்கெட்டின் விலை 120 ரூபாவால் அதிகரிக்கப்படும் என சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் ஒரு தொன் பால்மாவின் விலை 5 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் உள்ளூர் சந்தையில் பால்மாவின் விலையை அதிகரிப்பதை தவிர வேறு வழியில்லை எனவும் இது தொடர்பில் நிதி அமைச்சு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (நி)

# யாழ்.போதனா மருத்துவமனைக்கு 50 லட்சம் ரூபாய் அன்பளிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு 50 இலட்சம் ரூபாய் பணம் கனடா நாட்டு புலம்பெயர்ந்த குடும்பம் ஒன்றினால் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் உயிரிழந்த சீலா சுகுமார் ஞாபகார்த்தமாக இந்த உதவி சுகுமார் குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து யாழ்ப்பாண போதனா பணிப்பாளர் கே.நந்தகுமார் தெரிவிக்கையில் குறித்த உதவி மருத்துவமனை நலன்புரி சேவைக்கு வழங்கப்பட்டு அதன் ஊடாக இருதய சிகிச்சை பிரிவிற்கு தேவையான இயந்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் என தெரிவித்தார். (4-6-33-104)

# புற்றுநோயியல் நிபுணர்கள் அமைப்பிற்கு புதிய தலைவர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை புற்றுநோயியல் நிபுணர்கள் அமைப்பின் புதிய தலைவராக புற்றுநோயியல் மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி நடராஜா ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.



இவர் காரைநகர் மண்ணை பிறப்பிடமாகக் கொண்டு, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில். கல்வி கற்றவர்.

இவர் தெல்லிப்பழை புற்று நோய் மருத்துவமனை அமைவதற்கு பல பரிமாணங்களில் முயற்சித்தவர். (4-6-104)

# 116 வயது மூதாட்டி காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் மிகவும் வயது முதிர்ந்த பெண்ணாக கருதப்படும், கன்கானமி கமகே டிங்கி ஹாமி, நேற்று தனது 116 வயதில் காலமானார்.

கடந்த ஆண்டு சர்வதேச முதியோர் தினத்தில் கௌரவிக்கப்பட்ட டிங்கி ஹாமி, 116 ஆண்டுகள் வாழும் அரிய பாக்கியத்தை பெற்றிருந்தார். (நி)

# டொலர் ஒன்றின் விற்பனை விலை 259 ரூபாவாக உயர்வு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலையானது 259.99 ரூபாவாக அதிகரித்துள்ளது.

வரலாற்றில் முதன் முறையாக இலங்கை ரூபாவின் உத்தியோகபூர்வ டொலர் விலை 250 ரூபாவை கடந்தமை முதல் சந்தர்ப்பமாகும்.

அதே நேரம் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 249.96 ரூபாவாகும்.

எவ்வாறெனினும் அமெரிக்க டொலரின் விற்பனை பெறுமதி 230 ரூபாவை தாண்டாது என மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை இரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# ராஜாங்க அமைச்சராக லெஹான் பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்தே ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துள்ளார். (நி)

# யாழ்ப்பாணம் சர்வதேச திரைப்பட விழா-2021





(யாழ்ப்பாணம்)

ஏழாவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவின் இரண்டாவது பகுதி நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல்-10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமானது.

'யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுயாதீனச் சினிமாவினைக் கொண்டாடுதல்' எனும் நோக்கத்துடன் யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா கடந்த-2014 ஆம் ஆண்டிலிருந்து வருடம் தோறும் குறித்த விழா கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகநல மேம்பாட்டிற்காகத் தன்னை ஈகை செய்த பெரியார் வைத்தீஸ்வரன்



உளவளத் துணையாளர், ஓய்வு பெற்ற சுகாதாரக் கல்வி அதிகாரி கார்த்திகேசு வைத்தீஸ்வரன் அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லை என்பதை நினைக்கும் போது துயரம் இதயத்தை நெருடுகிறது.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்ற நிலையாமையின் பெருமைக்கு அவர் ஆட்பட்டுவிட்டார். எனினும் அவரின் வாழ்வியல் தடங்கள், அவர் ஆற்றிய தூய்மையான பணிகள் என்றும் நிலைத்த பெருமையாய் இம் மண்ணில் நீடு வாழும்.

உண்மை, இணுவில் தந்த புகழ்பூத்த மனிதர்களுள் அமரர்.கார்த்திகேசு வைத்தீஸ்வரன் அவர்களும் ஒரு வர். யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சுகாதாரக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய வைத்தீஸ்வரன் அவர்கள் சுகாதாரப் பணியாளர்களை உருவாக்குவதிலும் சுகாதார விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதிலும் அளப்பரிய சேவையாற்றியவர்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் நிதானமாகவும் அன்போடும் மற்றவர்களின் மனம் நோகாமலும் நடந்து கொள்ளக்கூடிய உயர் பண்பாளராக விளங்கிய, அவர் வடபுலத்து சுகாதாரத் துறையில் ஒரு மைல்கல் எனலாம்.

ஆம், குடும்ப நல சேவையாளர்கள்-பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்-தாதிய உத்தியோகத்தர்கள் என்போருக்கான பயிற்சிகளை வழங்குவதிலும் சமூகத்தில் சுகாதார வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் அவர் வழங்கிய பயிற்சிகள் இன்றும் நம் மண்ணில் மனிதநேயத்தோடு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரக் கல்வி அதிகாரியாக கடமையாற்றிய அமரர். வைத்தீஸ்வரன் அவர்கள் பல பிரிவுகளைக் கொண்ட சுகாதாரத் துறையை ஒன்றிணைத்து அதன் மூலம் சுக நலனை மக்கள் சமூகத்திற்கு வழங்கியவர்.

தவிர, காலத்திற்குக் காலம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களாக இருந்தவர்களுக்கு நிலைமைகளை எடுத்துக்கூறி, சுகாதார மேம்பாட்டிற்குப் பெருந்துணை புரிந்தவர்.

தனது ஓய்வுக் காலத்திற்குப் பின்னரும் அவர் தனது சுகநலப்பணியை ஓய்வுறுத்தவில்லை.

உளவளத் துணையாளராக இருந்து அவர் ஆற்றிய பணியின் காத்திரம் அவரின் உயர்ந்த பண்பின் சான்றாதாரம். இதற்கும் மேலாக, சுகநலம் சார்ந்த புத்தகங்களைத் தமிழ் மொழியில் வெளியிட்டு நம் தமிழ்ச் சமூகத்திற்கு அவர் ஆற்றிய சேவை என்றும் போற்றுதற்குரியது.

இருபதுக்கும் மேற்பட்ட சுகநலம் சார் புத்தகங்களை வெளியிட்ட அவர், தமிழகத்தில் இருக்கக் கூடிய நம் ஈழத் தமிழ் உறவுகளைச் சந்தித்து அவர்களை ஆற்றுப்படுத்தும் பணியையும் மேற்கொண்டார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் செயலாளராக இருந்து அவர் ஆற்றிய தமிழ்ப் பணி வைத்தீஸ்வரன் அவர்களின் உன்னதமான சிந்தனையின் உச்சமெனலாம்.

இன்னும் சைவ சித்தாந்தம், திருமந்திரம் ஆகியவற்றுக்கான விளக்கவுரை வகுப்புகளை நடத்தி எங்கள் சைவத்தின் மகிமையை தான் வாழுங்காலத்தில் எடுத்துரைத்தவர்.

பகையின்றி, சினமின்றி மக்கள் பணி செய்த அமரர் வைத்தீஸ்வரன் அவர்களின் புண்ணிய ஆத்மா இணுவில் பரராஜசேகரப் பிள்ளையாரின் திருவடிகளில் பேரின்பம் பெற பிரார்த்திப்போமாக!

ந.விஜயசுந்தரம்
(சுக வாழ்க்கைப் பேரவை)

## ஸ்ரீசாந்த் ஓய்வு



இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இந்திய அணிக்காக 27 டெஸ்ட், 53 ஒருநாள் மற்றும் 10 இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த். டுவிட்டரில் தனது ஓய்வை அறிவித்துள்ளார். (4-6)

## மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகளிலிருந்து விலகினார் ஜோகோவிச்

இந்த வருடம் நடைபெறும் முதல் இரண்டு மாஸ்ட்ர்ஸ் தொடர்களான இண்டியன் வெல்ஸ் மற்றும் மியாமி பகிரங்க டென்னிஸ் ஆகிய போட்டிகளிலிருந்து சேர்பிய வீரர் நோவாக் ஜோகோவிச் விலகியுள்ளார்.

அமெரிக்காவில் அமுலில் உள்ள கடுமையான கொரோனா தொற்று சுகாதார விதிகள் காரணமாக அவர் இந்த இரண்டு போட்டிகளையும் தவிர்க்க தீர்மானித்துள்ளார்.

அமெரிக்க பிரஜைகளல்லாத எவரும் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்பது அந்நாட்டிலுள்ள கடுமையான சுகாதார விதிகளில் ஒன்றாகும்.

கொவிட் - 19 தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளவில்லை என பி.பி.சி செய்திச் சேவைக்கு கடந்த மாதம் நோவாக் ஜோகோவிச் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள மொன்டே கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2530

### மேனகன்

கசப்பான அனுபவங்கள் இல்லை என்றால், இனிப்பான வாழ்க்கை என்ன என்று தெரியாது



அதனால் உடனே 2 பாகற்காய் வாங்கி சாப்பிடுங்க

### சாளினி

உக்ரைனுக்கும் ரஷ்யாவக்கும் போர் ஆரம்பிடுச்சு
அடுத்து இந்தியா சீனாக்கும் போர் ஆரம்பித்து விடும்னு பயமா இருக்கா சார்
ஆமா சார்
அப்ப ஒரு நம்மகிட்ட ஒரு பாலிசி இருக்கு சார் போடுங்க
நீங்க செத்தா 5 லட்சம் பணம் சொளையா குடும்பத்துக்கு கிடைக்கும்



### யதுசன்




### மதுசா




### சிந்துஜன்

பழகிய கத்தி என்றாலும்
பதம் பார்க்கிறது பல
நேரங்களில் பக்குவமில்லாமல்



### அபிஷா



"பகை வரும் என்றும் ஒரு தவறை
தட்டிக் கேட்காமல் கடந்துச் செல்வது.....
அந்த தவறுக்கு
உடந்தையாகுவதற்கு சமமாகும்"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர் தொகை இரட்டிப்பாக அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 10, 688 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இது கடந்த வருடத்தினை காட்டிலும் இரண்டு மடங்காக உயர்வடைந்துள்ளதென அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

11 மாவட்டங்களில் 38 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு நோய் பரவும் அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதென சமூக சுகாதார நிபுணர் விசேட மருத்துவர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# 5 இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 5 பேர் இந்திய கடலோரக் காவல்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடலோரக் காவல்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் தூத்துக்குடிக்கு தெற்கே ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களது படகையும் பறிமுதல் செய்துள்ளனர். (நி)

# நாட்டின் எரிபொருள் நெருக்கடி
## உலகமெங்கும் பேசுபொருளாகியுள்ளது



(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி தற்போது உலகின் பல்வேறு நாடுகளின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் களத்தில் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கும் கிரிக் இன்போ இணையத்தளமும் இது குறித்து செய்தியினை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய கிரிக்இன்போ இணைய தளத்தின் உத்தியோகபூர்வ முகநூல் கணக்கில் தாங்கள் இட்டுள்ள விசேட பதிவு ஒன்றின் மீது பலரும் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

நாட்டிலுள்ள பெட்ரோல் நிரப்பு நிலையம் ஒன்றில் இளைஞர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடும் புகைப்படத்தை கிரிக்இன்போ இணையத்தளம் அதிகாரப்பூர்வ பேஸ்புக் கணக்கில் பதிவிட்டுள்ளது.

நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடியால் எரிபொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், பெட்ரோல் நிலையங்களை மூடிவிட்டு இளைஞர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (நி)

# கடுகதி ரயில் தடம் புரண்டது

(கொழும்பு)

பிரதான மார்க்கத்தின் பொல்கஹாவெல-அலவ்வ இடையில் ரயிலொன்று தடம்புரண்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கடுகதி ரயிலே இவ்வாறு தடம் புரண்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால் பிரதான மார்க்கத்துடனான ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# ஓராண்டு நினைவு அஞ்சலி

எங்கள் அகல்விளக்கு

## அமரர். திருநாவுக்கரசு சரஸ்வதி

பூர்வபக்க நவமி திதி (11.03.2022)



| மண்ணுலகிற்கு | விண்ணுலகிற்கு |
|---|---|
| 1932 | 2021 |
| 11 | 02 |
| 18 | 20 |

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் வாழ்வின் வழிகாட்டியாய்
என்றென்றும் ஒளி வீசும் அகல்விளக்கே
எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுதான்
என்றாலும் பல நூற்றாண்டுகள் எம்முடன்
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
எம் நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்

(10568)

செல்வம் மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
076 317 7147

# இராசிபலன்

11.03.2022
மாசி 27, வெள்ளிக்கிழமை
நவமி முழுவதும்

மிருகசீரிடம் பிற்பகல் 2.59 மணிவரை
சுபநேரம் - 6.23-7.53 மணிவரை
இராகுகாலம் -10.53-12.23 மணிவரை

சந்திராஷ்டமம்-விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வழியில் மனநிறைவான செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** வியாபார விருத்தியுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

**கும்பம்** பிள்ளைகளின் சுபகாரியங்களில் அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் நாள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயம் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**மீனம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

சிவனே என்றிருந்தாலும் தீவினை விடாது துரத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயுவை கொள்வனவு செய்ய யாழில் குவிந்த மக்கள்



(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதும் எரிவாயு தட்டுப்பாடு உள்ள நிலையில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் எரிவாயுவைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் முண்டியடிப்பதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது.

அந்தவகையில் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு முன்னால் மக்கள் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு முண்டியடித்ததை அவதானிக்கமுடிந்தது.

நீண்டநேரம் மக்கள் வரிசையில் நின்று எரிபொருள் எரிவாயுவை கொள்வனவு செய்து சென்றனர். அத்துடன் பலர் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியாமல் திரும்பியும் சென்றனர்.(4-6-18-33-104)

# மக்களின் பணத்தில் சம்பளம் பெறுகிறோம் அவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் நாங்கள் பொதுமக்களுக்கான சேவை யினை திறம்பட செயற்படுத்த வேண்டும் என யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

"யாழ்.மாவட்ட கிராம உத்தியோகத்தர் அலுவலக முகா மைத்துவப் போட்டி - 2021" மாவட்ட மட்ட விருது வழங்கும் நிகழ்வு, மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்றது. அந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் நாங்கள் பொதுமக்களுக்காக சரியான முறையில் செயற்பட வேண்டும். எனவே தமது இலக்கினை தவறாது கடமையாற்ற வேண்டும்.

அத்தோடு எங்களைப் பற்றிய ஒரு சுய பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களுக்கு வழங்குகின்ற சேவைகளை உரிய வகையில் வழங்கி மக் களைத் திருப்திப்படுத்தி செய ற்பட வேண்டும். மக்களை திருப்திப்படுத்துவது என்பது மிகவும் இலகுவான காரியமல்ல. எனவே பொதுமக்களுடன் இணைந்து இசைந்து செயற்பட வேண்டும்.

பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் சரியாக இயங்க வேண்டுமானால் கிராம மட்டங்களில் கிராம உத்தியோகத்தர்கள் வினைத்திறனாக செயற்பட வேண்டும். அத்துடன் பொதுமக்களுக்கான சேவையை வழங்க முடியும். எனவே கிராம உத்தியோ கத்தர்கள் நீங்கள் இந்த விட யத்தை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என தெரிவித்தார். (4-6-18-33-104)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் க.பொ.த. உயர் தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் பயனடையும் வகையில் ' எதிர்கால துறைசார் திட்டமிடல் கருத்தரங்கு ' நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்காகத் திட்டமிட்டுள்ளது.

தாம் கல்வி கற்ற துறையில் சித்தியடைந்தோ அல்லது தவறினாலோ மேற்கொண்டு எதிர்காலத்தில் எந்தத் துறையில் மேற்படிப்பை மேற்கொண்டால் தமது எதிர்காலத்தை வளப்படுத்தலாம் என்பதற்கு வழிகாட்டுவதற்கான கருத்தரங்காகவே இது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என யாழ்ப்பாண நிலைய தலைவர் கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (4)

# சுகாதார வசதிகள் இன்றி மலசலகூடம்

(கரணவாய்)

யாழ்ப்பாணத்தில் உள்ள பொது மலசலகூடம் கதவின்றியும் சுகாதார வசதிகள் இன்றியும் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நகர்ப்பகுதியில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள ஆண்கள் மலசலகூடமே கதவுகள் இன்றியும் சுகாதார வசதிகளின்றியும் காணப்படுகிறது. இது தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுக்குமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-60)

# 4,450 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை

## யாழ்.மாவட்ட பெண்கள் சமாசம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 4,450 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு இதுவரை அரசாங்கத்தின் வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை என யாழ்.மாவட்ட பெண்கள் சமாச உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அண்மையில் விழுது நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழில் இடம்பெற்ற அரசியல் வாதிகள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை அணுகும் நிகழ்வின் போதே பெண்கள், சமாச உறுப்பினர்கள் இதனைத் தெரிவித்தனர். இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சிப் பிரதேசத்தில் 5,583 பெண் தலைமைக் குடும்பங்கள் உள்ள போதிலும் அதில் 1,133 குடும்பங்களுக்கே இதுவரை வாழ்வாதார உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. 4,450 பெண் தலைமைக் குடும்பங்களுக்கு இன்னமும் அந்த வாழ்வாதார உதவி கிடைக்கப்பெறவில்லை.

தென்மராட்சியில் மாத்திரமே இவ்வளவு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளனர் என்றால் யாழ். மாவட்டத்தில்எவ்வளவு பெண்தலைமை வகிக்கும் குடும்பங்கள் இருப்பார்கள்? அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கிடைக்கவில்லை. அதற்கான வழி வகைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அரசாங்க உத்தியோகத்தர்களும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வெளிப்படுத்தி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (4-6-30)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

அமரர்.கிறகறி கொல்வினின் 100 ஆவது நினைவு நாளை முன்னிட்டு அவரது நண்பர்களின் ஏற்பாட்டில் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பங்களிப்போடு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் இளவாலை புனித அன்னாள் ஆலய சனசமூக நிலையத்தில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது!

குருதிக்கொடையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு குருதிக் கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (4-6-18)

# கணனிக் கற்கை பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யா/சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் இயங்கும் கணனி கற்றல் நிலையத்தினால் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான 3 மாத கால கணனிக் கற்கை பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என பாடசாலை அதிபர் மு.முரளிதரன் அறிவித்துள்ளார். (4)

# அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்தில் 2022.01.02 ஆம் திகதியன்று வெற்றிடம் ஏற்பட்டுள்ள யா/தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை (வகை-II), யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை (வகை-II)ஆகியவற்றுக்கான அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாணத்தி[illegible] பாடசாலைகளில் நிர[illegible] இலங்கை அதிபர் சேவையில் சேவையாற்றுபவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களை வலயக்கல்வி அலுவலகத்தின் தாபனப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பப் படிவங்கள் 14.03.2022 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என வடமராட்சி [illegible] அறிவித்துள்ளார். (4-6)

# மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இக்ரஃ மாதர் அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் 'பெண்களும் சமூக அந்தஸ்தும்' எனும் தலைப்பில் உரையாடல் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து கலை நிகழ்வு, கௌரவிப்பு நிகழ்வு, பரிசளிப்பு நிகழ்வு என்பனவும் இடம்பெறும். (4)

# மதிப்பளித்தல் நிகழ்வு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் 2019 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சையில் தமிழ் பாடத்தில் அதி விசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கான மதிப்பளித்தல் நிகழ்வை எதிர்வரும் 19 ஆம் திகதி நடத்தவுள்ளது என தமிழ்ச் சங் கத்தின் பொதுச் செயலாளர் இ.சர்வேஸ்வரா அறிவித்துள்ளார்.

(4-6-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதியமைச்சர் சபைக்கு வருவதில்லை எதிரணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ சபைக்கு வருவது இல்லை. அவர்தான் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் தெளிவுப்டுத்த வேண்டும். ஆனால், அவருக்குப் பதிலாக வேறு உறுப்பினர்கள் பதில் கூறி வருகின்றனர்.

நிதி அமைச்சரைச் சபைக்கு வரச் சொல்லுங்கள். இல்லையென்றால் சபாநாயகர் நிதி அமைச்சருக்குக் கட்டளை அனுப்புங்கள்." என எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கூடியது. இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. "நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கே இருக்கின்றது. டிசெம்பர் 10ஆம் திகதியே நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சபையில் உரையாற்றினார்.

அதன் பின்னர் நாட்டின் நிதி நிலவரம் தொடர்பில் கடந்த மூன்று மாதங்களாக நிதி அமைச்சர் பாராளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்தவில்லை.

எனவே, பாராளுமன்றம் வந்து தெளிவுபடுத்துமாறு. நிதி அமைச்சருக்கு சபாநாயகர் உத்தரவிடவேண்டும்" - என அவர் கோரிக்கைவிடுத்தார். (நி)

# புத்தாண்டு காலத்தில் டொலருக்கு விசேட கொடுப்பனவு

(கொழும்பு)

தமிழ் - சிங்கள புது வருட பிறப்பிற்காக வெளிநாடுகளிலுள்ள இலங்கை பணியாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் டொலருக்கு விசேட கொடுப்பனவை வழங்குவதற்கு நிதி அமைச்சு உத்தேசித்துள்ளது.

அதனடிப்படையில், நாட்டிற்கு அனுப்பப்படும் டொலறொன்றுக்கு மேலதிகமாக 20 ரூபாவை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

## பங்குனி உத்தரப் பொங்கல்- 2022

### வர்த்தக நிலையங்களை ஏலத்தில் வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 18.03.2022ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உற்சவ கால வியாபார நடவடிக்கைகளுக்காக கடைகள் ஏலம் விடுதல் எதிர்வரும் 13.03.2022ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும்.

வியாபாரம் மேற்கொள்ள விரும்பும் வர்த்தகர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
(சி-3933) **நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. **அப்புத்துரை சிவரூபன்**
(B.A,Dip. in Edu, M.A)

மானிப்பாய் வட கிழக்கு மானிப்பாயைச் சேர்ந்தவரும் வலிகாமம் கல்வி வலயத்தில் முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரான சைவப்புலவர், சைவ சித்தாந்த ரத்னம்.

திரு.**அப்புத்துரை சிவரூபன்** அவர்கள் நீதி அமைச்சின் அகில இலங்கை சமாதான நீதவானாக வட மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி உயர்திரு **ஆர். கண்ணன்** முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தமையினையிட்டு பாராட்டி, அவர்களின் சமூக சேவைகள் தொடர வாழ்த்துகின்றோம்.

Best Wishes (0539)

மாமியார் – பா.செல்வராணி
மைத்துனன் – பா.கிருஷ்ணகாந்

சிவமயம்

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்

## பங்குனி உத்தரப் பொங்கல்

### 18.03.2022

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 11.03.2022ஆம் திகதி விளக்கு வைக்கும் வைபவத்துடன் ஆரம்பமாகி 18.03.2022ஆம் திகதி பொங்கல் உற்சவம் பகல், இரவாக சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

- 11.03.2022 விளக்கு வைக்கும் நாளிலிருந்து அடியார்கள் நேர்த்திகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- விசேட போக்குவரத்து சேவைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பண்டம் வழமைபோன்று மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடிவரை சென்று வருவதுடன் வழமையான விடயங்கள் அனைத்தும் அங்கு இடம்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ஆலய கொடிகளுடன் உழவு இயந்திரத்தில் வருபவர்களுக்கு மட்டும் தண்டல் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேறு ஏவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.
- ஆலயத்திற்கு வருபவர்கள் தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்க்கவும்.
- அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**
**நாகதம்பிரான் ஆலயம், புளியம்பொக்கணை.**
(சி-3932)

JAFFNA EDUCATION FAIR 2022
Your Future Begins Here...
Higher Education & career guidance exhibition

## 2021 - 2022 ஆண்டு உயர்தர மாணவர்களுக்கான விசேட அழைப்பிதழ்!

### உயர்கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சி!

அனுமதி இலவசம்

**உயர்கல்விக்கான உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்!**

யாழ் மாணவர்களுக்கு 100 % சதவீத புலமைப்பரிசில் வாய்ப்பு

**11th | 12th March 2022**



From 10.00 am to 6.00 pm

@ The Valampuri Hotel, Jaffna


விபரங்களுக்கு அழையுங்கள்
**0722600620**

Main Sponsor: A·P·I·I·T Inspire Tools for learning
Co-Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, LITHAN, ECLaaS DIGITAL ACCELERATOR
Official event partner: CICRA CAMPUS
Print Media Partners: STUDENT Life, வலம்புரி
Organized by: EVOLUTION
(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 107 ஆண்டுகளுக்கு பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட கப்பல்



நீரில் மூழ்கி காணாமல் போன "எண்டூரன்ஸ்" என்ற கப்பலின் சிதைவுகள் 107 ஆண்டுகளுக்கு பின்னர் ஆய்வாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1915 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தென்னாபிரிக்காவின் நகரில் இருந்து புறப்பட்ட இந்த மரக்கப்பல் வெடல் கடலில் மூழ்கியதிலிருந்து, கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்நிலையில் தென் முனைப் பெருங்கடலின் ஒரு பகுதியான வெடல் கடலின் 9,868 அடி (3,008 மீட்டர்) ஆழத்தில் கப்பல் இவ்வாரம் கண்டுபிடிக்கப்பட்டதாக போக்லாந்து கடல்சார் பாரம்பரிய அறக்கட்டளை தெரிவித்துள்ளது. (நி)

## உக்ரைன் அரசை கவிழ்க்கு... எமக்கில்லை-ரஷ்யா ...

(மொஸ்கோ)

உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தையில், சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் தற்போதைய அரசைக் கவிழ்க்கும் நோக்கில் அங்கு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இந்தப் போர் உக்ரைனின் இறையாண்மைக்கோ, அந்த நாட்டு மக்களுக்கோ எதிரானது அல்ல என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்' என ரஷ்ய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மரியா ஸகாரோவா தெரிவித்தார்.

## மனிதாபிமான உதவிப்பொருட்களை உக்ரைனுக்கு அனுப்பியது இந்தியா

(டில்லி)

இந்தியாவில் இருந்து உக்ரைனுக்கு இரண்டாவது தவணையாக மனிதாபிமான உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறை செயலாளர் ஹர்ஷ்வர்தன் சிரிங்கலா தெரிவித்துள்ளார்.

இதன்படி உணவு, மருந்து, மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிப் பொருட்களை ஏற்றிக் கொண்டு இந்திய விமானப் படை விமானம் ருமேனியா சென்றடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புகாரெஸ்ட் விமான நிலையம் வந்தடைந்த உதவிப் பொருட்களை ருமேனிய அதிகாரிகளிடம் வழங்க உள்ளதாக இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## தென்கொரிய ஜனாதிபதி தேர்தலில் யூன் சுக் யோல் வெற்றி



(சியோல்)

தென் கொரியாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில், பழமைவாத முன்னாள் உயர்மட்ட வழக்கறிஞரான யூன் சுக் யோல், வெற்றி பெற்று ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

98 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், கடும் போட்டிக்கு மத்தியில் மக்கள் கட்சியின் யூன் சுக் யோல், 48.59 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அவருக்கு, கடும் போட்டியாக விளங்கிய ஜனநாயக கட்சி வேட்பாளர் லீ ஜே மியுங் 47.80 சதவீதம் வாக்குகள் பெற்றார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை காலை 6 மணிக்கே ஆரம்பமான வாக்குப்பதிவின் போது, கொரோனா பரவல் காரணமாக மக்கள் முகக் கவசம் மற்றும் கையுறைகளை அணிந்து தங்களது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றினர். (நி)

## தாய்வான் பிரச்சினை சீன... வெளியார் தலையீட்டிற்... ரஷ்யா-உக்ரைன் போருக்கு மத்...

**(பீஜிங்)**

**தாய்வானின் சுதந்திர தனி நாட்டுக் கோஷம், பிரிவினை வாத ... மற்றும் தாய்வான் - சீனா விவகாரத்தில் வெளிச்சக்திகளின் த... இராணுவம் ஒரு போதும் பொறுத்துக்கொள் ளாது என இரா... தொடர்பாளர் வு கியான் தெரிவித்துள்ளார்.**

மக்கள் விடுதலை இராணுவத்தின் பயிற்சி நடவடிக்கைகள் எந்த வகையிலும் தாய்வான் தோழர்களை இலக்காகக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

தாய்வானின் ஜனநாயக முற் போக்குக் கட்சி அதிகார மையத்தின் பிரிவினைவாத நடவடிக்கைகள் மற்றும் வெளி சக்திகளுடனான கூட்டு என்பனவே தாய்வான் ஜலசந்தியில் தற்போதைய பதற்றம் மற்றும் குழப்பத்திற்கு அடிப்படைக் காரணம்.

தாய்வான் பிரச்சினையானது

## மகப்பேற்று மருத்துவமனை மீது ரஷ்யா வான்வெளித் தாக்குதல்

### குழந்தை உட்பட மூவர் பலி



(கீவ்)

உக்ரைன் - மேரியோ போல் நகரில் உள்ள மகப் பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மீது ரஷ்யா வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இக்குண்டு வீச்சு தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

இதில் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் உட்பட சுமார் 17 பேர் காயமடைந்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## க்கும் நோக்கம்
## ா தெரிவிப்பு

கடந்த மாதம் 24 ஆம் திகதி உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை அறிவித்த போது, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினும் இதே கருத்தை தெரிவித்திருந்தார்.

உக்ரைனை 'நாஜிக்களின் பிடியிலிருந்து' விடுவிப்பதற்காகவே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக அப்போது அவர் விளக்கம் அளித்திருந்தார். (நி)

# வாகன தொழிற்சாலைகளை தேசிய மயமாக்குவோம்

## உலக நாடுகளை மிரட்டும் ரஷ்யா

(மொஸ்கோ)

வெளிநாட்டு வாகன தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் அனைத்து தொழிற்சாலைகளும் தேசிய மயமாக்கப்படும் என ரஷ்யா பகிரங்கமாக மிரட்டியுள்ளது.

உக்ரைன் மீது படையெடுத்துள்ள ரஷ்யா 2 வாரத்திற்கும் மேலாக போர் செய்து வருகிறது. ரஷ்யாவின் படையெடுப்புக்கு கண்டனம் தெரிவித்துள்ள உலக நாடுகள் பலவும் அதன் மீது பொருளாதார தடையை விதித்துள்ளன.



இதன் ஒரு பகுதியாக ரஷ்யாவில் இயங்கி வரும் வெளிநாடுகளை சேர்ந்த டொயோட்டா, ஃபோக்ஸ் வாகன், ஜாகுவார், லேண்ட் ரோவர், மெர்செடிஸ் பென்ஸ், ஃபோர்ட், பி.எம்.டபிள்யூ ஆகிய ஆட்டோமொபைல் தயாரிப்பு நிறுவனங்கள் தங்களது வாகன உற்பத்தியையும், ஏற்றுமதியையும் நிறுத்தி வைத்துள்ளன.


இதையடுத்து வெளிநாட்டு அந்நிறுவனங்கள் தங்களது வாகன தயாரிப்பை மீண்டும் தொடங்காவிட்டால், அவர்களது அனைத்து தொழிற்சாலைகளும் தேசியமயமாக்கப்படும் என ரஷ்யா பகிரங்கமாக மிரட்டியுள்ளது.

ஐரோப்பா மற்றும் மேற்குலக நாடுகளில் விற்பனை செய்யப்படும் பெரும்பாலான வாகனங்கள் ரஷ்யா மற்றும் உக்ரைனிலேயே உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்நிலையில் ரஷ்யாவின் இந்த மிரட்டல் உலக நாடுகளை அச்சம் கொள்ள செய்துள்ளது. (நி)

# னாவின் உள் விவகாரம்
# ற்கு இங்கு இடமில்லை
## மத்தியில் சீனாவின் எச்சரிக்கை

ா வாத செயற்பாடுகள்
ளின் தலையீட்டை சீன
ா இராணுவ செய்தித்



சீனாவின் உள் விவகாரம் ஆகும். அது எந்த வெளியார் தலையீட்டுக்கும் இடமில்லை. தாய்வான் விவகாரத்தில் அமெரிக்காவும் ஜப்பானும் எவ்வளவு அதிகமாக செயற்படுகின்றனவோ, அதே அளவுக்கு தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒரு மைப்பாட்டை பாதுகாக்க நாங்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் எனவும் சீன இராணுவ செய்தித் தொடர்பாளர் வு கியான் எச்சரித்தார். (நி)

# ரஷ்யா-உக்ரைன் வெளிவிவகார அமைச்சர்கள் துருக்கியில் சந்திப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் செர்ஜிலாவ்ரோவ் மற்றும் உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா ஆகியோர் துருக் கியில் சந்திப்பார்கள் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு உறுதி செய்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு பெப்ரவரி 24 ஆம் திகதி தொடங்கிய பின்னர் இருவருக்கும் இடையிலான முதல் சந்திப்பு இதுவாக அமையவுள்ளது.

இந்த சந்திப்பு இன்று நடைபெறும் என இராஜதந்திர மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் இதுவரை சாதகமாக முடியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

ளனர்.

இந்த தாக்குதலில் இடிபாடுகளுக்குள் மக்கள் சிக்கிக் கொண்டிருப்பதாக தெரிவித்து ள்ள உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி. இத்தாக்குதல் ஒரு போர்க் குற்றம் எனத் தெரிவித்தார்.

மருத்துவமனை தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்துள்ள காணொளி ஒன்றையும் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

மக்கள் வெளியேறுவதற் கான போர் நிறுத்தத்தை ரஷ்ய படையினர் அறிவித்த நிலையில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வெள்ளத்தில் சிக்கி 22 பேர் பலி
## அவுஸ்ரேலியாவில் அவசரநிலை பிரகடனம்

(கன்பெரா)

அவுஸ்ரேலியாவின் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்ததையடுத்து, அங்கு தேசிய அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

நான்கு பேர் இறந்த வடக்கு நியூ சவுத் வேல்ஸில் உள்ள லிஸ்மோர் நகருக்கு விஜயம் செய்த போது பிரதமர் ஸ்கொட் மோரிசன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.




'தேசிய அளவில் இது ஒரு பெரிய பேரழிவு' என பிரதமர் ஸ்கொட் மோரிசன் விபரித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டத்தில்

# எரிபொருளுக்கு டோக்கன்

(தருமபுரம்)

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டோக்கன் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுகின்றது.**



வழங்கப்படும் எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விற்கப்படுகின்றது.

அத்துடன் பொதுமக்கள் நாளாந்தம் பல மணிநேரம் எரிபொருள் பெறுவதற்கு வரிசையில் நிற்பதன் காரணமாக தொழில்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் விரைவில் எரிபொருள் தட்டுப் பாட்டுக்கு தீர்வு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர். (4-6-316)

### சான்றுப் பொருட்களை பெற்றுக்கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள வழ.இல. 40744 (B/1356/2020) வாகன இல.NPLN-9745 உடைய வெலிரோ கப் மோட்டார் வாகனம் மற்றும் வழ.இல. 36160 (B/790/2019) வாகன இல. NPPS-0470 உடைய கப் மோட் டார் வாகனம் ஆகிய சான்றுப் பொருட்களின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத் திப் பெறுக்கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் எனவும் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# அரசாங்கம் தீர்வு தராது

## சர்வதேசம் தலையிட வேண்டும்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்



(நெளுக்குளம்)

அரசாங்கம் தீர்வினை தராது சர்வதேசமே தலையிட வேண்டும் என வவுனியாவில் ஐந்து வருடங்களை கடந்து தொடர் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்துள்ளனர்.

போராட்டம் குறித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் வெளிநாடுகளின் தலையீடு அவசியம் தேவை. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நேரடியாக வந்து இப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தொடர் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம்.

இன்று எமது போராட்டத்தை வெளிநாடுகள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டு இருக்கின்றன.

நாங்கள் வெளிநாட்டின் தலையீட்டினையே நம்பி இங்கிருந்து போராடி வருகின்றோம்.

வவுனியாவில் கடந்த 1847 ஆவது நாட்களாக வீதியிலிருந்து போராடி வருகின்றோம். தற்போது இடம்பெற்றுவரும் ஐ.நா. சபை மாநாட்டில் எங்களுக்கு தீர்வு கிடைக்கும், எங்களுடைய பிள்ளைகளை வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் இருக்கின்றோம்.

எத்தனை வருடங்கள் கடந்தாலும் தீர்வு கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என மேலும் தெரிவித்தனர். (4-6-299)

# வவுனியாவில் தொழிற்சந்தை



(நெளுக்குளம்)

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் வவுனியா மாவட்ட செயலகத்தோடு பிரதேச செயலகங்களும் இணைந்து நடத்திய மாபெரும் தொழிற்சந்தை நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலாளர் சரத்சந்திர மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

இத் தொழிற்சந்தையில் 25க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் நேரடியாக வருகைதந்து தொழில் வாய்ப்பினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 300 | 350 |
| தக்காளி | 230 | 220 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 120 | 110 | 120 |
| கரட் | 200 | 300 | 330 | 350 |
| பூசணி | 120 | 130 | 120 | 140 |
| புடோல் | 200 | 160 | 180 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 120 | 100-250 | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 170 | 200 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 150 | 160 | 240 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 140 | 100 | 160 |
| லீக்ஸ் | 160 | 120 | 140 | 180 |
| பீற்றூட் | 300 | 150 | 180 | 200 |
| கறிமிளகாய் | 250 | 200 | 280 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 | 1400 |
| போஞ்சி | 250 | 180 | 270 | 400 |
| கத்தரிதம்புள்ள | 140 | 140 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 80 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 140 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 140 | 130 | 140 | 240 |
| முள்ளங்கி | 50 | 120 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | -- | 80 | -- |

# கடும் பனிமூட்டம்

## போக்குவரத்து சிரமம்



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்றுக் காலை அதிகளவான பனிமூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்திருந்தனர்.

வவுனியா நகரப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 8 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது.

இதன் காரணமாக வேலைக்கு செல்வோர், பாடசாலை மாணவர்கள், வாகன சாரதிகள் எனப்பலரும் சிரமங்களை எதிர் கொண்டிருந்தனர். (4-6-299)

# மணல்

## ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் ஏலவிற்பனை நாளை 12 ஆம் திகதி சனிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு

## மேலும் ஒரு வாரம் வரை நீடிக்கும்

(கொழும்பு)

**நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு மேலும் ஒரு வாரம் வரை நீடிக்கும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.**

நாட்டை வந்தடைந்துள்ள கப்பலில் இருந்து எரிவாயுவினை தரையிறக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக நாட்டை வந்தடைந்த 2 ஆயிரத்து 600 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயு தாங்கிய கப்பலில் இருந்து. சமையல் எரிவாயுவினை தரையிறக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளாந்தம் 900 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயுவினை நாடு முழுவதிலும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சமையல் எரிவாயு மற்றும் மின் துண்டிப்பு காரணமாக நாட்டின் பல பகுதிகளில் இயங்கிய பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நாட்டை வந்தடைந்தார்

## ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகவா நேற்று வியாழக்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். அவர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் உள்ளிட்டவர்களை சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகவா இலங்கைக்கு வருகை தந்துள்ளார் என்பதுக் குறிப்பிடத்தக்கது. (4)

## காகித தட்டுப்பாடு

# அச்சக திணைக்களங்களின் பணிகளுக்கு பாதிப்பு

(கொழும்பு)

காகித பற்றாக்குறை காரணமாக அரச அச்சக திணைக்களத்தின் பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அரச அச்சக திணைக்களத்தின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



இதற்கமைய பாடசாலை புத்தகங்கள், லொத்தர் சீட்டுகள் உள்ளிட்டவற்றை அச்சிடுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக சில மாதங்களுக்கு முன்னர் காகிதங்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்பட்டது.

பின்னர் துறைமுகத்தில் சிக்கியிருந்த காகிதம் தாங்கிய 8 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட காகிதம் தற்போது நிறைவடைந்துள்ளதன் காரணமாக அச்சிடல் பணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். (4)

# மின்சார சபையின் GT-7

## ஒற்றை மின் உற்பத்தி அலகு மூடப்பட்டது

(கொழும்பு)

களனிதிஸ்ஸ அனல்மின் நிலைய வளாகத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் GT-7 இன் ஒற்றை மின் உற்பத்தி அலகு மூடப்பட்டுள்ளது.

டீசல் இல்லாத காரணத்தினால் நேற்று வியாழக்கிழமை காலை திடீரென மூடப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

GT-7 ஆலையின் செயற்பாடுகள் நேற்றுக் காலை 7.21 மணிக்கு திடீரென நிறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அனல்மின் நிலையம் நிறுத்தப்பட்டதால், தேசிய மின்வாரியத்திற்கு 115 மெகாவோல்ட் மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (நி)

# இன்று ஒரு தகவல்

## ஃபார்மாலிட்டி பார்க்க வேண்டுமா?

நான் ஃபார்மாலிட்டி பார்ப்பதில்லை என்று சொல்லிக் கொள்பவர்கள் பலர். ஆனால் உண்மையில் இவர்கள் நடைமுறையில் அதைப் பின்பற்றுபவர்களாக இருக்க மாட்டார்கள்.

அப்படிச் சொல்லுகிற ஒருவர் உங்கள் வட்டாரத்தில் இருந்தால் அவர்களிடம் அப்படியே நடந்து பாருங்கள். மெல்ல அவர்கள் உங்களிடமிருந்து ஒதுங்கத் தொடங்குவார்கள்.

உதாரணமாக –

அத்தகைய நபர் உங்கள் வீட்டுக்கு வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். "வாருங்கள்" என வாய் திறந்து சொல்லாமல் இருந்து பாருங்கள். மறுநாள் உங்களைப் பார்த்தால் முறுக்கிக் கொண்டு போய்விடுவார். அல்லது மீண்டும் வரமாட்டார்.

உங்களால் விரும்பப்படாத நபர் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வந்தால் – ஏன் எதிரியே வந்தாலும் கூட வாருங்கள் என்று கூறி வரவேற்க வேண்டும் என்பது சம்பிரதாயமான விஷயங்களுள் ஒன்று. இதைப் பின்பற்றித்தான் ஆக வேண்டும்.

சம்பிரதாயங்கள் மேற்போக்கில் போலியாகவும், செயற்கையாகவும் தோன்றினாலும் அவை அனைத்தும் உள்ளர்த்தம் கொண்டவை. உள்ளங்கை ஒன்றுபடச் செய்பவை. பொருள் பொதிந்தவை.

இது ஃபார்மாலிட்டி என்னும் கடலினுள் அமுந்திக் கிடக்கும் உலகம். ஆனால், அப்படியொன்றும் இல்லையென்று பச்சைப் பொய்யை வெட்கமின்றிப் பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

வாருங்கள், உட்காருங்கள், சாப்பிடுங்கள். உங்களுக்கு நான் தொந்தரவு கொடுத்து விட்டேனே? உங்கள் உதவி மறக்க முடியாதது. மிக்க நன்றி, என்றெல்லாம் எந்தெந்தச் சூழ் நிலையில் எந்தெந்த சொற்கள் தேவைப்படுமோ அவற்றையெல்லாம் சொல்லி சுற்றியிருப்பவர்களை மகிழ்ச்சியிலும் இக்கட்டிலும் ஆழ்த்திக் கொண்டே இருக்கத்தான் வேண்டும். இந்த உலகை வெல்லும் வழி அதுதான்.

வேறு வகையில் சொல்ல வேண்டுமானால்–

பழகும் விதத்தில் மற்றவர்கள் விரும்பும் வகையில் நடந்து கொள்வதே ஃபார்மாலிட்டி அல்லது சம்பிரதாயமாகும்.

அதே நேரத்தில் நீங்கள் ஃபார்மாலிட்டி பார்க்கக்கூடாது என மற்றவர்கள் விரும்புகிறார்கள்.

இது என்ன நியாயம்? என நீங்கள் வினாத் தொடுக்கலாம். நியாயமில்லைதான். இருந்தாலும் அதை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? சொல்ல முடியும் என்றாலும் அதை மற்றவர்கள் தாம் விரும்புவார்களா?

பல விஷயங்களில் உலகம் ஒருவழிப் பாதையாக இருக்கிறது. இதைப் புரிந்து கொண்டு செயற்படாதவர்கள், ஒதுக்கப்படுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### ஜாதக தோஷம்!



வேம்பு சாஸ்திரிக்குப் புரோகிதம் செய்து வைக்கும் மந்திரங்களே தெரியும். ஆனால் அவர் தமக்கு சோதிடம், ஆருடம், மாந்திரீகம் முதலிய எல்லாம் தெரியும் என்று கூறி மக்களை ஏமாற்றி ஏதாவது ஹோமம் செய்து கெட்ட கிரகங்களிடமிருந்து விடுதலை பெற வேண்டும் எனக் கூறிப் பணம் பறித்து வந்தார். கிராம மக்களும் அவர் சொறுவதை நம்பி அவர் சொன்னபடி எல்லாம் செய்து வந்தார்கள்.

அந்த ஊருக்கு மாற்றலாகி குருசாமி என்ற பாடசாலை ஆசிரியர் வந்தார். அவருக்கு வேம்பு சாஸ்திரியின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலேயே குடி இருக்க இடம் கிடைத்தது. அவர் சாஸ்திரியின் கபடச் செயலைக் கண்டு அதற்கு ஓர் முடிவு கட்டத் தீர்மானித்தார். ஒரு நாள் வேம்பு சாஸ்திரியே குருசாமியைக் கண்டு "நான் சோதிட சாஸ்திரத்தில் கரை கண்டவன். உங்களைப் பார்த்ததுமே இப்போது உங்களுக்குச் சனி தோஷம் பிடித்திருக்கிறது என்று தெரிந்து கொண்டு விட்டேன். இன்னும் பத்து நாட்களில் உங்களுக்குப் பெரிய கண்டம் வரும். அதனால் உங்கள் உயிருக்கே ஆபத்து நேரலாம்" என்றார்.

குருசாமியும் "அப்படியா! இந்தக் கண்டத்திலிருந்து தப்ப வழி இல்லையா?" என்று கேட்க வேம்புவும் "ஏன் இல்லாமல்? இந்த தோஷத்தைப் போக்கி கண்டத்திலிருந்து தப்ப என் போன்ற ஒரு நல்ல பிராமணனுக்கு ஒரு பசு மாட்டை தானம் செய்தால் போதும். இதற்கு ஒரு ஹோமமும் செய்ய வேண்டும். மொத்தம் ஐந்நூறு ரூபாய் செலவாகும்" என்றார்.

குருசாமியும் "ஐயோ! ஐந்நூறு ரூபாயா? என்னிடம் இருநூறு ரூபாய் தானே இருக்கிறது. அதற்கு மேல் கொடுக்க முடியாதே".

எனவே வேம்பு சாஸ்திரியும் "பரவாயில்லை. நான் சரிப்படுத்திக் கொள்கிறேன். ஒரு நூறு ரூபாய் கொடுத்து என்னிடமுள்ள பசுமாட்டை இப்போது வாங்கிக் கொள்ளுங்கள். வரும் சனிக்கிழமையன்று ஹோமம் செய்து பசுமாட்டை நானே தானமாக வாங்கிக் கொள்கிறேன். ஹோமத்தை மீதமுள்ள நூறு ரூபாயில் முடித்து விடுகிறேன்" என்றார்.

அப்போது வேம்பு சாஸ்திரி "அடே பாவி! சனி தோஷம் உனக்குப் பிடித்திருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் உனக்கு கண்டம் வரப் போகிறது. இந்த ஹோமம் செய்து பசுவை எனக்குத் தானம் செய்யாவிட்டால் உன் உயிருக்கே ஆபத்து. தெரிந்ததா?" என்று பலமாகக் கத்தினார்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




**கோசலைக்கு அறிவித்தல்**

நாள் குறிக்கக் கோள்கள் அறிந்த கணக்கரை அரசன் கூட்டினான். இச் செய்தி சூறைக்காற்று போல நகர் முழுவதும் பரவியது. இராமன்பால் அன்பு கொண்ட அணங்கு அனைய நங்கையர் கோசலை பால் தலை தெறிக்க ஓடினர்.

"மன்னன், உன் மகனுக்கு மணிமுடி சூட்டுகிறான்" என்று மனம் மகிழ்ந்து உரைத்தனர். தென்றலின் சுகத்தை அச்சொற்கள் தேடித் தந்தன.

அதேசமயத்தில் வாடையின் சூடும் அவளைச் சுட்டது. வடவைக் கனல் அவளைத் தீண்டியது, தசரதன் ஆட்சியை விட்டு நீங்குகிறான் என்பதால்;

"ஈன்றபொழுதிற் பெரிது உவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்"

என்ற குறட்பாவுக்கு அவள் விளக்கமாக மாறினாள். தன் மகன் மூத்தவன்; அறிவு முதிர்ந்தவன்; பொறுப்பு ஏற்கத் தக்கவன் என்பதால் தேர்வு சரி எனப் பட்டது. இவற்றோடு நால்வருள் இராமனைப் பெற்றதால் அவள் பேருவகை அடைந்தாள். தனக்கு நெருக்கமான சுமத்திரையை அழைத்துக்கொண்டு நாரணன் கோயிலை நண்ணிப் பூசனைகளும் வழிபாடுகளும் செய்தாள்.

**வசிட்டர் அறிவுரை**

அடுத்த நாளே முடிசூடும் நாள்" எனக் கனிந்து உரைத்தனர்.

தசரதன் வசிட்டரிடம் முடிசூட்டுதற்கு முன் இராமனைச் சந்தித்து நல்லுரைகள் நல்க வேண்டினார்.

ஆட்சிக்கு வரும் இளவரசனுக்கு நல மிக்க வாசகங்களை வடித்துத் தந்தார்; பட்டம் தாங்கும் விழாவுக்கு முன் பார்வேந்தன் அறிய வேண்டியவை இவை என எடுத்து ஓதினார்.

"நாட்டுக்குக் கேடு விளைவிப்பது உட்பகையும் வெளித்தாக்குதலும் ஆகும்; பகை இல்லாவிட்டால் போர் இல்லை; போர் இல்லை எனில் அழிவு இல்லை; அமைதி நிலவினால் தான் மக்கள் ஆக்கப் பணிகளில் ஊக்கம் காட்டுவர்; செல்வம் செழிக்கும்; அறங்கள் தழைக்கும்". "நாட்டு ஆட்சிக் குப் பொருள் வருவாய் தேவை; தேவைக்கு மேல் மக்களிடமிருந்து வரித் தொகை பெறக் கூடாது. ஈட்டும் பொருளை நாட்டு வளர்ச்சிப் பணிகளுக்கே செலவிட வேண்டும்; சொந்த சுகங்களுக்கு அவற்றைப் பயன்படுத்தக் கூடாது".

"நீதித் துறையில் அரசன் இரு தரப்பினரையும் விசாரித்து நடுவுநிலை பிறழாமல் நீதி வழங்க வேண்டும்; கொடியவரை ஒறுப்பது களைகளை நீக்குவதற்கு நிகர் ஆகும். அப்பொழுதே ஏனைய மக்கள் அச்சமின்றி வாழ முடியும்".

"அரசன் மிக்க ஆற்றல் உடையவன். ஆயினும் போற்றத் தகு நல்லமைச்சரைக் கேட்டுச் செயல் ஆற்ற வேண்டும்; முதிர்வு உடைய அறிஞரைக் கலக்காமல் அதிர்வு தரும் செயல்களை மேற்கொள்ளக் கூடாது".

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்; அவர்களை நல்வழி இயக்குவதற்கு மன்னன் வழிகாட்டியாய் இருக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு ஒரே ஒருவர் அறிவுரை சொன்னால் அது 'வெள்ளி' யைப் போன்றது. பலர் சொன்னால் 'தங்கம்' கிடைத்தது போல. உங்கள் குறை என்னவென்று அறிந்து உடனே அதைத் திருத்திக் கொள்ளுங்கள். -அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சந்திரிகாவின் கருத்து தவிர்க்க முடியாத தீர்வு!

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்பது மிகவும் முக்கியமான விடயம்.

பிரச்சினைகள் தனிநபர் முதல் வீடு, குடும்பம், சமூகம், நாடு, உலகம் எனப் பல்வகைகளில் ஏற்படக்கூடியன.

எதுவாயினும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறும்போது, அது புதுப்புதுப் பிரச்சினைகளை உருவாக்கும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

தவிர, ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்காத சந்தர்ப்பத்தில், பிரச்சினையின் தாக்கம் வலிமையடையும்

அதேநேரம் குறித்த பிரச்சினைகளுக்குப் பொருத்தமற்ற தீர்வுகள் முன்வைக்கப்படுமாயின், அதனால் இருப்பதையும் இழந்து அவமானத்தையும் சுமக்க வேண்டிவரும்.

இதனை உணர்த்துவதுதான் சிங்களத்தில் இருக்கக்கூடிய மாதன முத்தாவின் கதை.

ஆக, எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு உரிய நேரத்தில் உரியவாறு தீர்வு காணப்பட வேண்டும் என்பதுடன் அந்தத் தீர்வானது குறித்த பிரச்சினையின் தன்மை, அதன் விளைவு என்பதைப் பொறுத்தும் அமைய வேண்டும்.

அந்தவகையில், நம் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பெருமந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதில் ஆளுந்தரப்பு பெரும் குழப்பமடைந்துள்ளது.

இந்தக் குழப்பமானது, எடுக்கின்ற அத்தனை தீர்மானங்களையும் குழப்பமாக்குகிறது.

நாணயத்தாள்களைக் கண்டபாட்டில் அச்சிட்டது முதல் எரிவாயு, எரிபொருள், உணவுப் பொருள் என்பவற்றின் விலைகளைக் கண்டபாட்டில் ஏற்றியதுவரையில், எல்லாமுமே பாதகமாக அமைந்தாயிற்று.

இந்நிலையில் தேசிய அரசு ஒன்றை உருவாக்கலாமா? என்று நினைக்குமளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

எனினும் தேசிய அரசை அமைப்பது சாத்தியமற்றதென்பதால், அந்த யோசனையை எதிர்க்கட்சிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

இதை நாம் கூறும்போது, அப்படியாயின் நாட்டின் அதீத பொருளாதார நெருக்கடிக்கு என்னதான் தீர்வு என்ற கேள்வி எழும்.

இங்குதான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் முன்வைத்த கருத்து கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

அதாவது, தற்போதைய அரசாங்கம் பதவி விலக வேண்டும். அவ்வாறு பதவி விலகினால் மட்டுமே இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்பதாக அவரின் கருத்து அமைகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிய மேற்போந்த கருத்துக்குள் இருக்கக்கூடிய தீர்வு, வேறெந்த மாற்று வழிமுறைகளிலும் இருப்பதாகத் தெரியவில்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

## யாழ். சர்வதேச திரைப்பட விழாவின் 3ஆம் நாள் திரையிடல்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றுவரும் 7ஆவது யாழ்ப்பாண சர்வதேசத் திரைப்பட விழாவின் மூன்றாவது நாளிற்கான காட்சிப்படுத்தல்கள் இன்று காலை 10.00 மணிக்கு "குட்நைட் கொழும்பு" என்ற இலங்கைத் திரைப்படத்துடன் ஆரம்பமாகும்.

"குட்நைட் கொழும்பு" திரைப்படமானது கோவிட் 19 பெருந்தொற்றுக் காலப் பகுதியில் அன்றாட வாழ்க்கை எவ்வாறு கழிந்தது என்பதை மையமாகக் கொண்டது.

அடுத்து பகல் 1 மணிக்கு செர்ரி கோவிந்த், டி.தீபேஷ் ஆகியோரின் இந்தியத் திரைப்படமான "அவனோவிலோனா" காட்சிப்படுத்தப்படும். பாதிரியார், திருநங்கை மகன் மற்றும் கன்னியாஸ்திரியான மகள் ஆகிய மூவரையும் மையமாகக் கொண்ட ஆன்மீகம் சார்ந்த கற்பனைத் திரைப்படமாகும்.

மாலை 4.45 இற்கு ஒஸ்கர் ரோஹ்லரின் நெறியாள்கையில் உருவான ஜேர்மானிய அறிமுகத் திரைப்படமான "என்ஃபண்ட் டெரிபிள்" காட்சிப்படுத்தப்படும். இது, ஜேர்மனிய திரைப்பட நெறியாளரான ரெய்னர் வேர்னர் பாஸ்பின்ரெரின் சுயசரிதையைப் பேசுகிறது.

அத்துடன்,நண்பகல் 12.00 மற்றும் பிற்பகல் 3.30க்கு விருதுக்காகப் போட்டியிடும் போர்த்துக்கல், பங்களாதேஷ், கஜகஸ்தான், கம்போடியா, இலங்கை மற்றும் இந்தோனேசியா நாடுகளின் குறுந்திரைப் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இக்காட்சிகள் அனைத்தும் இலவசம். (ம)

## கெற்பேலியில் சங்கிலி அறுப்பு மூன்று மணி நேரத்தில் மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் அறுக்கப்பட்ட தங்கச் சங்கிலி கொடிகாமம் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவின் அதிரடி நடவடிக்கை மூலமாக அடுத்த மூன்று மணி நேரத்தில் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பாடசாலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய ஆசிரியையின் ஒரு பவுண் சங்கிலியை கெற்பேலிப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக்கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் விரைந்து செயற்பட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு அடுத்த மூன்று மணி நேரத்தில் சங்கத்தானை மற்றும் நுணாவில் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்ததுடன் ஆசிரியையின் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.(ம-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை 12 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ் பிரதேசத்தில்** சுன்னாகம் சந்தை, கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியாவத்தை, மல்லாகம் நீதிமன்றம், அளவெட்டி, அளுக்கை, ஏழாலை, கணேஸ்வரம், தெல்லிப்பளை, அளவெட்டி பலநோக்கு கூட்டுறவு சபை, மாதனை, மல்லாகம், மாவிட்டபுரம், பன்னாலை, துர்க்காபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** இலங்கை வங்கி சுகாதாரத்திணைக்களம், கச்சேரி, தேசிய சேமிப்பு வங்கி-வவுனியா, மக்கள் வங்கி, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா வைத்தியசாலை, நீர் வழங்கல் (கச்சேரி) வைரவ புளியங்குளம், ஆதி விநாயகர் கோவிலடி, பிரதேச செயலக அலுவலகம்- மன்னார் வீதி, புகையிரத நிலைய வீதியடி, வவுனியா நகரம் ஒருபகுதி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, குல் மென் ஐஸ் தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கடற்படைமுகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பெனி பிரைவேட் (லிமிடெட்) (கடல் உணவுக்களஞ்சியம்), பெரிய கரைசல் பல்மெய்ரா ஹீவுஸ், பல்மெய்ரா ஹவுஸ்-தலைமன்னார், தப்ரோபேன் உறைந்த உணவு (இறால் பண்ணை) - எருக்கலம்பிடி, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், வங்காலைப்பாடு சென்டலார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, இளைஞர் படைப்பயிற்சி மையம், எருக்கலம்பிட்டி, ரோசப்வாஸ்நகர், கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படைமுகாம், மாலுவாடி சந்தி, ஓலைத்தொடுவாய், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரை சல், பேசாலை, புதுக்குடியிருப்பு திட்டம், புதுக்குடியிருப்பு, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல், வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாராபுரம், தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு, தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்புதிட்டம், வங்காலைப்பாடு ஆகிய இடங்களிலும் **கிளி நொச்சி பிரதேசத்தில்** ஆனையிறவு மின் உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### இறை ஞானம்

❖ இல்லறத்தான் இறைபக்தி கொண்டவனாக இருக்க வேண்டும். அதே வேளையில் அவன் இடையீடு இல்லாமல் செயல்புரிய வேண்டும். தன் கடமைகள் அனைத்தையும் செய்ய வேண்டும். செயல்கள் அனைத்தின் பலனையும் அவன் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

❖ வேலை செய்துவிட்டு அதன் பலனை பொருட்படுத்திருப்பது. ஒருவனுக்கு உதவி செய்த பின் அவன் நன்றியுடன் இருக்க வேண்டும் என்று எண்ணாமல் இருப்பது, ஒரு வேலையை செய்து விட்டு அதனால் பெயரோ புகழோ வருமா எதுவும் கிடைக்காமல் போகுமா என்பது பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் இருப்பது இவையெல்லாம் மிகவும் கடினமான காரியங்கள்.

❖ உலகமே புகழும் என்றால் வடிகட்டின கோழைகள் கூட வீரனாக மாறி விடுவான். சமுதாயம் ஏற்றுக்கொள்ளுமானால் அது தன் மீது புகழ்க் கொடியை ஏற்றுகிறது என்றால் கடைந்தெடுத்த முட்டாள் கூட வீரதீரச் செயல்களைச் செய்து விடுவான்.

❖ [illegible] எதிர்பார்க்காமல் தொடர்ந்து நன்மை செய்வது என்பது தான் [illegible] முடிந்த தியாகங்களில் தலைசிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 16

### கம்பஹா மாவட்டத்தின் இனப்பிரிவு மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-2012

மாவட்டத்தின் சனத்தொகை, இனப்பிரிவு மற்றும் சமய அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் அட்டவணை (b1) இல் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய சனத்தொகையில் பெரும்பான்மையினர் (90.5%) சதவீதமான சிங்கள மக்கள் என்பதோடு பௌத்த சமயத்தவர்கள் (71.3%) சதவீதமாகும். இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகை (4.2%) சதவீதமென்பதோடு (4.9%) சதவீமானவர்கள் இஸ்லாம் சமயத்தவர்களாகும்.

அட்டவணை (a1)இனப்பிரிவு, சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு- கொழும்பு மாவட்டம்

| இனப்பிரிவு | எண்ணிக்கை | % | சமயம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 1,778,971 | 76.5 | பௌத்தம் | 1,632,225 | 70.2 |
| இலங்கைத் தமிழர் | 235,090 | 10.1 | இந்து | 186,454 | 8.0 |
| இந்தியத் தமிழர் | 24,298 | 1.0 | இஸ்லாம் | 274,087 | 11.8 |
| இலங்கை முஸ்லிம் | 249,609 | 10.7 | றோமன் கத்தோலிக்கம் | 162,314 | 7.0 |
| வேறு | 36,390 | 1.6 | வேறு கிறிஸ்தவம் | 66,994 | 2.9 |
| | | | வேறு | 2,275 | 0.1 |
| மொத்தம் | 2,324,349 | 100 | மொத்தம் | 2,324,349 | 100 |

கம்பஹா மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012

| பிரதேசச்செயலகம் | தமிழர் | முஸ்லீம் |
|---|---|---|
| நீர்கொழும்பு | 13672 | 19673 |
| கட்டான் | 10864 | 3431 |
| திவுலப்பிட்டிய | 1198 | 80 |
| மீரிகம | 999 | 7443 |
| மினுவங்கொட | 1056 | 5918 |
| வத்தளை | 36299 | 10065 |
| ஜா-எல | 9278 | 853 |
| கம்பஹா | 1271 | 230 |
| அத்தனகல்லை | 1615 | 21285 |
| தொம்பே | 619 | 2304 |
| மஹர | 2582 | 5471 |
| களனி | 8900 | 8696 |
| பியகம | 2029 | 12172 |
| கம்பஹா மாவட்டம் | 90382 | 97621 |


றோமன் கத்தோலிக்க சமயத்தவர்களின் எண்ணிக்கை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் (19.5%) சதவீதமென்பதோடு அவ்வெண்ணிக்கை ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது அது உயர் பெறுமதியொன்றைக் கொண்டுள்ளது. தமிழர்களின் சனத்தொகை (இலங்கை மற்றும் இந்தியத் தமிழ் மக்களின் மொத்தம்) 3.9 சதவீதமென்பதோடு, மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 2.3 சதவீதமான மக்கள் இந்து சமயத்தவர்களாகும்.

### கம்பஹா மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்திற்கு 40 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி கம்பஹா மாவட்டம் 20 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின்படி தேர்தல்ஆணையாளரால், மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்திற்கு 40 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். இதன்படி**

**கம்பஹா மாவட்டம் 20 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**




கம்பஹா மாவட்டத்தில் 13 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 1,177 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 2,304, 833 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 115,242 ஆக நிர்ண்யிக் கப்பட்டிருந்தது.

கம்பஹா மாவட்ட செயலகத்தில் 06.12.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 17 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும் படிகேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 23 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 40 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

**கம்பஹா மாவட்டத்தில் 13 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 1,177 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 2,304,833 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 115,242 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

பெரும்பாலான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறைபற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தரவில்லை. அநேகமான பிரேரணைகளின் பரிந்துரைகளில் எல்லை நிர்ணயம் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளையும் உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும், பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளின்) எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தன.

பரிந்துரைக்கப்பட்டவற்றில் தொகுதிகளுக்கு இடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடியவில்லை.

அதுமட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப் பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத் தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத் தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதேநேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களைத் தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது. மேலும் அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து முடியுமான வகையில் குறிப்பிட்ட தொகுதிகளில் அவர்களின் சமூக விருப்பங்களை நிறைவு செய்யும் வகையில் தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி...

நகரில் இருந்து யாழ். நோக்கி சென்ற கப்ரக வாகனம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதி அபிவிருத்தி பணிகளுக்காக பதுளையில் இருந்து யாழிற்கு வந்திருந்த 61 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவரது சடலமானது உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-18,33,104)

## நாட்டில்...

அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, A,B,C,D,E,F,G,H,I,J,K,L ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இன்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் இரண்டரை மணித்தியாலங்களுக்கும் மாலை 6 மணிமுதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறே P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு மாலை 5 மணிமுதல் இரவு 9 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் மின்வெட்டினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புத்தூரில்...

பெற்றது.

இதில் மாசிலாமணி குகபிரகாசம் (வயது-59), அவரது மனைவி குகபிரகாசம் சுகுனா (வயது- 55) என்பவர்களே உயிரிழந்தவர்களாவர்.

உயிரிழந்த தம்பதியரின் மகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவிட்டு மாலை வீட்டுக்கு சென்றபோது வீட்டில் பெற்றோர் இருக்கவில்லை.

இதனையடுத்து தேடியபோது தண்ணீர்த் தொட்டி அருகில் தாய், தந்தையர் சடலமாக காணப்பட்டுள்ளனர்.

நேற்று மதியவேளை வாழைக்குலை ஒன்றினைக் கணவன் வெட்டியபோது தண்ணீர் இறைக்கும் மோட்டார் அருகிலே இருந்த மின்சாரக் கம்பி அறுந்துள்ளது.

அதனை சரிசெய்த பின்னர் மனைவி அதற்கு அருகில் உள்ள கிணற்று தொட்டியிலே நீராடிக் கொண்டிருந்தபோது மின்சார விபத்து ஏற்பட்டு மனைவி மீதும் மின்சாரம் பாய்ந்தது. மனைவியைக் காப்பாற்றுவதற்காக கணவன் ஓடிச் சென்ற நிலையில் இவருக்கும் மின்சாரம் பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே இருவரும் உயிரிழந்துள்ளனர்.

நீர் இறைக்கும் மோட்டாருக்கு செல்லும் மின் கம்பியில் மின் ஒழுக்கு ஏற்பட்டு வாழை மரத்திற்கு மின்சாரம் பாய்ந்துள்ளது. நீர்த் தொட்டியில் வாழை இலை தொடுகையாகியிருந்துள்ளது.

வாழை இலை ஊடாக தொட்டியில் உள்ள தண்ணீரில் மின்சாரம் பாய்ந்துள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-18,33,104)

## கூட்டமைப்...

பிற்கும் இடையில் முக்கிய சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதியினை சந்திப்பதற்கான நேரத்தினை ஒதுக்கித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தது.

எனினும் அதுகுறித்து ஜனாதிபதியோ அல்லது ஜனாதிபதி செயலகமோ தொடர்ச்சியாக மௌனமாகவே இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மருந்து...

ளது.

மருந்து இறக்குமதியாளர்களுக்கு நியாயமான இலங்கை டொலரின் பெறுமதி உயர்வினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

மேலும் மருந்துகளை தட்டுப்பாடின்றி விநியோகிக்க மருந்து இறக்குமதியாளர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

## எரிபொருட்களி...

வதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எனவே எதிர்காலத்தில் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ம)

## அடுத்து...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் நிமல் சிறிபால டி சில்வா இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். -

இதன்போது அங்கு உரையாற்றிய அவர், "அடுத்துவரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும். அது தொடர்பில் எந்த சந்தேகமும் கொள்ள வேண்டாம்.

கூட்டமைப்பு அரசியலில் நாம் தனித்துப் போட்டியிட்டு பின்னர் எமது கொள்கையை ஏற்றுக்கொள்ளும் தரப்புடன் கூட்டமைப்பாக இணைந்து கொள்ள முடியும்" எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## எரிபொருள்...

இந்த விலை உயர்வானது 11 ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என லங்கா IOC நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 254 ரூபாவும் ஒரு லீற்றர் டீசலின் புதிய விலை 214 ரூபாவும் ஆகும்.

இதேவேளை, அண்மையிலேயே லங்கா IOC நிறுவனம் தமது எரிபொருட்களின் விலையை அதிகரித்திருந்த நிலையில் தற்போது மீளவும் விலை அதிகரிப்பு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பொருட்களின்...

நாணய மாற்று வீதத்தை சந்தையில் நிலவும் கேள்வி மற்றும் விநியோகத்திற்கு அமைய நெகிழ்வுப் போக்குடன் தீர்மானிப்பதற்கு இடமளிக்கப்பட்டதையடுத்து, நேற்று அமெரிக்க டொலரின் விற்பனை விலை 260 ரூபா வரை அதிகரித்திருந்தது.

சுமார் ஒரு வருடமாக டொலர் பெறுமதியை 202 ரூபா என்ற அளவில் நிலையாக பேணியதையடுத்து, இலங்கை மத்திய வங்கி நேற்று முன்தினம் நாணய மாற்று வீதம் சுதந்திரமாக தீர்மானிக்கப்படுவதற்கு இடமளித்தது.

நாணய மாற்று வீதம் நெகிழ்வுப்படுத்தப்பட்டதன் பின்னர் அரச வங்கிகளில் டொலரின் விற்பனை விலை நேற்று 230 ரூபா வரை அதிகரித்தது. எனினும், நேற்று டொலரின் விற்பனை விலை 260 ரூபாவாக பதிவாகியது.

இரண்டு நாட்களுக்குள் டொலரொன்றின் விலை 58 ரூபாவால் அதிகரித்துள்ளது. இது 29% அதிகரிப்பாகும்.

டொலரின் விலை அதிகரிக்கும்போது இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்துப் பொருட்களினதும் விலைகள் அதிகரிக்கின்றமை வழமையாகும்.

டொலரின் விலை 260 ரூபாவாக நிலையாக இருக்கும்போது அரசாங்கம் வரிக்குறைப்பு அல்லது நிவாரணத்தை வழங்காத பட்சத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அத்தியாவசியப்பொருட்களின் விலை குறைந்தது 29 ரூபாவால் அதிகரிப்பதை தவிர்க்க முடியாது. ஆனால் தற்போது இலங்கை அரசு நிவாரணம் வழங்கும் நிலையில் இல்லை.

இந்த நிலையில், ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை 51 ரூபாவாலும் ஒரு லீட்டர் டீசலின் விலை 35 ரூபாவாலும் அதிகரிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

இதேவேளை, ரூபாவுடன் ஒப்பிடுகையில் டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 824 ரூபாவால் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 44 ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் பருப்பின் விலை 101 ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 45 ரூபாவாலும் அதிகரிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளது.

இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு கிலோ கிராம் பால் மா பக்கெட் விலையை 300 ரூபாவால் அதிகரிப்பதற்கு பால் மா இறக்குமதியாளர்களின் சங்கம் ஏற்கனவே தயாராகியுள்ளது.

இதற்கமைய, 400 கிராம் எடையுடைய பால் மா பக்கெட் விலை 120 ரூபாவால் அதிகரிக்கும் என அந்த சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம)

# வவுனியாவில் இளைஞன் கைது

வவுனியாவில் 22 வயதுடைய இளைஞரொருவர் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சந்தை உள்வட்ட வீதியில் அமைந்துள்ள நகை விற்பனையகம் ஒன்றில் கடந்த 4 ஆம் திகதி சங்கிலி ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-250)

மெகா பவர்
திகதி 10/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1050
J 13 10 39 40 58

மஹஜன சம்பத
திகதி 2022/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 4702
X 5 8 3 5 3 9

தன நிதானய
திகதி - 2022.03.10
சீட்டிழுப்பு இலக்கம் - 732
H 04 19 54 66

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1505
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,550,680/-
வெற்றி இலக்கங்கள் 02 40 65 69 M

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.10
சீட்டிழுப்பு இல: 3840
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,443,580/-
வெற்றி இலக்கங்கள் 06 10 26 49 N

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1679
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 10.03.2022
தினம் வியாழன்
Q 03 05 08 15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 51,784,192/-

සංවර්ධන වාසනාව
திகதி : 2022-03-10
வெற்றி வாரம் : 492 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.14,268,908/-
G 24 18 14 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,981,800/-
ரூ.14,392,964/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,926,477/-
திகதி 10.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3391
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 24 26 30 31 மீனம்
4 0 2 4 3 1 9
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,243,200/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 17 15 26 46 63
சீட்டிழுப்பு வாரம் 855
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.03.10 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 220,622,209/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் மேலதிக தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்டவர்களில், மேலதிகமாக 3ஆவது தடவை (Pfizer) கோவிட்-19 தடுப்பூசியானது இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு வியாழக்கிழமை முதல் இரு வாரங்களுக்கு விசேடமாக வழங்கப்பட உள்ளது என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 20 வயதிற்கு மேற்பட்டவர்களில், மூன்றாவது மேலதிக தடுப்பூசியை (Pfizer) பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள பிரதேசங் களிலேயே அதிகளவு கோவிட்-19 தொற்றுக்கள் மற்றும் மரணங்கள் பதிவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

கோவிட்-19 நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள சுகாதார பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவது மட்டுமல்லாது தடுப்பூசியை காலக்கிரமத்தில் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும். எனினும் கவலைக்கிடமான வகையில் யாழ். மாவட்டத்தில் மூன்றாவது மேலதிக தடுப் பூசியை (Pfizer) பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைவரும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டார். (ம)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரை அண்மித்துள்ள பல்பொருள் அங்காடி நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- கணக்காளர்
- விற்பனையாளர்

ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.) (10577)

077 963 7483
021 222 2501



A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான

ஆங்கில, கணனி, சிங்கள பாடநெறிகள்

ஆரம்பம்: 12.03.2022 காலை 8.00 மணி

- Diploma in English
- Diploma in Computer Office Management
- Diploma in Sinhala
- IELTS
- IELTS LIFE SKILLS A1/B1



(C-3930)

E-CITY COLLEGE OF ENGLISH
No.320/3, Point Pedro Road, Anaipanthy, Jaffna.
021 221 7016, 070 771 7106, 077 201 7106
www.ecitycollege.lk


# நல்லூர் மந்திரி மனையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வரலாற்று தொன்மைவாய்ந்த நல்லூர் மந்திரி மனையில் யன்னல் மற்றும் யன்னல் கம்பிகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

மந்திரி மனையின் பின்பக்கமாக காணப்பட்ட யன்னல்களின் கம்பிகள் மற்றும் யன்னல் என்பவை பெயர்த்தெடுக்கப் பட்டு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-18,33,104)

# கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பமாகவுள்ளது. இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் இந்திய பக்தர்கள் 100 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்திய - இலங்கை இடையே கடல் எல்லையான கச்சதீவில் புனித அந்தோனியார் ஆலயம் உள்ளது.

இந்திய - இலங்கை பக்தர்களிடையே இணக்கமான உறவை மேம்படுத்த பாரம்பரியமாக இந்த விழா கொண்டாடப் பட்டு வருகிறது.

கடந்த 2020ஆம் ஆண்டு கொரோனா தொற்று பரவலால் இந்த திருவிழாவில் பக்தர்கள் அதிகமாக கலந்துகொள்ள அனுமதி வழங்கப்படவில்லை.

இன்று இராமேஸ்வரம் துறைமுகப் பகுதியில் இருந்து 4 விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டு படகில் 100 பக்தர்கள் கச்சதீவு வருகை தரவுள்ளனர். மேலும் இலங்கையிலிருந்து பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

# கோவிட் தொற்று 11 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 13 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட் டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 16, 374 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 654,336 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 08 . 1932



இறப்பு 10 . 03 . 2022

### கணபதிப்பிள்ளை செல்லையா

புற்றளை, புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்லையா அவர்கள் நேற்று (10.03.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு, பார்வதி, சின்னம்மா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சாமிநாதன், கணபதிப்பிள்ளை மற்றும் வடிவேலு, செல்வராசா, இராமச்சந்திரன், காலஞ்சென்ற வேல்முருகு, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் வித்தியானந்தன் (நோர்வே), அமுதா (ஆசிரியை - யா/புற்றளை மகா வித்தியாலயம்), ஜெயானந்தன் (லண்டன்), வனிதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைவாணி (நோர்வே), சிறிதரன் (முகாமையாளர், கணனி வள நிலையம், வடமராட்சி கல்வி வலயம்), சுபாஜினி (லண்டன்), சிவகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷன், அபிஷா, துவாரகன், அபிநயா, லக்ஷிகன், சஜீவன், லதுஷன், ஆரதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.03.2022) வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக மதியம் ஒரு மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(C-3938) 077 358 0755, 077 413 6234, 021 226 0071

# நாட்டில் நேற்று மேலும் 580 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 580 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில்இதுவரை கோவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 654,916 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கோவிட் தொற்றுக்குள்ளான மேலும் 113 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

அதன்படி, கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 618,616 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## தேவை

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகில் இயங்கும் அச்சகத்திற்கு

- இயந்திர இயக்குனர் (Kod)
- புத்தகம் கட்டுனர் தேவை.

அனுபவம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (10578)

077 250 6234



10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (C-3934)

WORLD EDUCATION CONSULTANCY
0779265447 / 0217200989



## நிரு ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

A/L 2023

அரசியல் விஞ்ஞானம்

ஆசிரியர் - இளங்கோ

ஆரம்பம் - 12.03.2022 சனி 6 மணி

(C-3937)



பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS (C-3869)

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3862)

0768226240


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org